மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவைகுண்டம்

EA.3/19 in EP.10/2019

வா.சா.3

தேதி : 10.03.2022

பெயர் : முத்துமாரி
க/பெ :

வயது : 35
தொழில் : VAO, அகரம்

கிராமம்: அகரம்
தாலுகா: ஏரல்

1873 ம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டம் 10 வது பிரிவின் படி 2022 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ம் நாள் உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

நான் இந்த வழக்கில் வாதி தரப்பில் அனுப்பபட்ட அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன்.

UDR க்கு முன்புள்ள பழைய கிராம கணக்கு பதிவேடு சா.சா.ஆ.14

சர்வே எண்.48/5, விஸ்தீரணம் 12 செண்ட் 4 பேர்கள் பெயரில் பட்டா உள்ளது. 1. ஞா.துரைப்பாண்டிய நாடார், 2.நா.அருணாச்சல நாடார், 3. த.துரையப்ப நாடார், 4. நா.தங்கவேல் நாடார் ஆகியோர்கள் பெயரில் உள்ளது.

UDR க்கு பின்புள்ள கிராம கணக்கு அ பதிவேடு சா.சா.ஆ.15

UDR க்கு பின்புள்ள கிராம கணக்கு அ பதிவேட்டு விபரபட்டியல் சா.சா.ஆ.16

1.நா.அருணாச்சல நாடார், 2.நா.தங்கவேல்நாடார், 3.நா.துரையப்பநாடார். 4.ரா.அருணாச்சலம். 5.பா.அன்னலெட்சுமி அம்மாள் ஆகியோர்கள் பெயரில் உள்ளது.

UDR க்கு பின்புள்ள கிராம 10(1) சிட்டா சா.சா.ஆ.17

பட்டா எண்.444 ல் நாராயண நாடார் மக்கள் அருணாச்சல நாடார் (1), தங்கவேல் நாடார் (2), பார்வதி ஆதித்தன் மனைவி அன்னலெட்சுமி அம்மாள் (3) ஆகியோர்கள் பெயரில் உள்ளது.

சர்வே எண்.48 க்குரிய புலவரைபடம் சா.சா.ஆ.18

சர்வே எண்.48 க்குரிய பட்டா மாறுதல் மனு மற்றும் உத்தரவு நகல் சா.சா.ஆ.19

குறுக்கு விசாரணை

பழைய கிராம கணக்கு பதிவேட்டில் ஞா.துரைப்பாண்டிய நாடார் பெயர் உள்ளது. மேற்படி நபரின் பெயர் UDR க்கு பின்புள்ள அ பதிவேட்டில் பெயர் இல்லை என்றால் சரிதான். மேற்படி பெயரை எதன் அடிப்படையில் நீக்கப்பட்டது என்பது எங்கள் ஆவணத்தில் துலங்குமா என்றால் துலங்காது. விற்பனை செய்திருந்தாலோ அல்லது பிரிண்டிங் தவறுகள் நடந்திருந்தாலோ பெயர் நீக்கப்பட வாய்ப்பு உள்ளது. அகரம் கிராமம் ஜமீன் கிராமம் என்றால் சரிதான். ஜமீன் கிராமம் என்பதனால் SLR மற்றும் OSR பதிவேடுகள் கிராம கணக்குகளில் இருக்காது. மேற்படி ஆவணங்கள் எங்கு இருக்கும் என்றால் தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இருக்க வாய்ப்பு உள்ளது. UDR பட்டாவில் அன்னலெட்சுமி அம்மாள் பெயர் உள்ளது என்றால் சரிதான். அன்னலெட்சுமி அம்மாள் துரைபாண்டி என்பவரின் மகள் தான் என்றால் சரியாக தெரியவில்லை. துரைபாண்டி நாடார் இறப்பிற்கு பின்பு ஆண்வாரிசான நாராயணன் நாடாரை சேர்க்காமல் அவரது பெண்வாரிசுகளான அன்னலெட்சுமி என்பவரை தான் பட்டாவில் சேர்த்துள்ளீர்கள் என்றால் நிலஉடைமை மேம்பாட்டு திட்டத்திற்கு பின்வரும் காலத்தில் பதியப்பட்ட அ பதிவேட்டில் உள்ளது. நாராயணநாடார் கொடுத்த பட்டா மாறுதல் மனுவில் 17 பட்டாகளின் நம்பர் மட்டுமே மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். பட்டா மாறுதல் செய்யப்பட்டது 3 புல எண்களுக்கு மட்டுமே ஆகும். பட்டா மாறுதல் உத்தரவில் சப்ரிஸ்டர் ஆபிஸ், ஏரல் Doc.No.10A, என்பது ஆவணத்தின்படி பட்டா மாற்றம் செய்யவில்லை என்றால் கிராம நிர்வாக அலுவலர் மூலம் கிராமத்தில் விசாரணை செய்யப்பட்டு வாரிசு சான்று படி வழங்கப்பட்ட ஆவணம் ஆகும். நிலஉடைமை மேம்பாட்டு திட்ட சிட்டா பதிவேட்டில் தங்கவேல் நாடார் மகன் சிவசுப்பிரமணியன் (1), வேல்சுப்பிரமணியன் (2) நபர்களின் பெயரில் பட்டா மாற்றம் செய்த விபரம் எங்கள் அலுவலகத்தில் இல்லை என்றால் திருவைகுண்டம் ஆவணகாப்பகத்தில் இருக்க வாய்ப்பு உள்ளது.